என்று சொல்லவில்லை. பெரிய தொழில்களை ஊக்குவிக்கக் கூடிய முறையிலே மத்திய அரசாங்கத்தோடு நிதி பெறுகிற அந்த நிகழ்ச்சிக்கு இது 'கான்ஃப்ரான்டேஷன்' அல்ல, முரண்பாடு என்று சொல்லவில்லை, அதை வற்புறுத்தி இயக்கம் நடத்தவேண்டும். அரசு முரண்பாடாக நடந்து கொள்ளவேண்டுமென்று சொல்ல வில்லை, சண்டையையே தொழிலாக வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை, அந்த முறையிலே இதை அணுகக்கூடாது. ஆகவே, பெரும் தொழில்களிலே ஈடுபடுகிற முயற்சியிலே நீங்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) பசி நேரம் பசி வந்துவிட்டால் பத்தும் பறந்துபோம் என்பார்கள். பதவி வெறி வந்தாலும், வேறு நிலையை உருவாக்கும். இரண்டும் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே, இடதுசாரி திசையில், இடதுசாரி மனோபாவம் கொண்டு நாம் முக்கியமான சட்டங்களைக் கொண்டு வரலாம்.

விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கச் சட்டம் கொண்டு வந்ததன் மூலமாக, கேரளாவிலே கம்யூனிஸ்ட் ஆட்சி கவிழ்ந்தா விட்டது? 75 வாரம் முடிந்து போன பிரச்னை. அதிலே எதுவுமே பிரச்னை இல்லை. பெருவாரியான, உழுது கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கேரளாவிலே, அங்கு ஆட்சி மாறவில்லை, மாறாது. ஆகவே, அந்த மாதிரியான சட்டங்களைக் கொண்டு வந்து எப்படிச் செய்ய வேண்டுமென்று விவாதிப்போம். அவசரப் பட்டு கொண்டு வரவேண்டுமென்று சொல்லவில்லை. சம்பந்தப் பட்ட கட்சிகளைக் கலந்து, அனுபவங்களைக் கொண்டு, மக்களுக்கு நல்லது செய்யவேண்டிய முறையிலே, இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். அதற்கேற்ற முறையிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய ஒத்துழைப்பை இந்தத் திசையிலே அரசு செல்லுமானால் தொடர்ந்து கொடுக்கும். அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எந்த நிகழ்ச்சிகளுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துணை போகாது என்று அறிவித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1·30]

5. அறிவிப்புகள்

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.—

இன்று (2.2.80) பகல் சுமார் 12.50 மணிக்கு பார்வையாளர் மாடத்தில் இருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பிய (1) திரு. காஞ்சி சுகுமாரன், — எஸ். எம். சின்னப்பா

மகன், (2) திரு. கே. இராசாராம்–சி. கிருஷ்ணசாமி நாயுடு மகன் ஆகிய இருவரும் தற்போது பேரவைக் காவலரின் (சாஜர்ன்ட்) காவலில் இருக்கிறார்கள். விசாரணையும் நடந்து கொண்டு இருக்கிறது. அவர்களது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

8. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

''இன்று (2.2.80) பகல் சுமார் 12.50 மணி அளவில் சட்ட மன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள . . .

(1) சென்னை, புளியந்தோப்பு, பார்டிசைன் லைன் 104–ம் எண் வீட்டிலிருக்கும் திரு. எஸ். எம். சின்னப்பாவின் மகன் காஞ்சி சுகுமாரன் என்று சொல்லிக் கொள்ளும் நபரும்

(2) சென்னை, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, காஸ்ராஸ்மித் நகர், 71-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. சி. கிருஷ்ணசாமி நாயுடு மகன் கே. இராசாராம் என்று சொல்லிக் கொள்ளும் நபரும் பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஏழு நாட்கள் வெறுங்காவல் (சிம்பிள் இம்பிரிசன் மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே எனக்கு அபிப்பிராய பேதம் கிடையாது. இதற்கு முன்னாலும் இம்மாதிரி இரண்டொரு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இதெல்லாம் கருத்தில் கொண்டு இந்த 7 நாட்கள் ரொம்ப அதிகம் என்று கருதுவதாலே அதை மூன்று நாட்களாகக் குறைத்து . . . . . .

. .